எண்: 59/2024 நாள்: 26.04.2024

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**
**எண்.3, தேர்வாணையச் சாலை , சென்னை – 600 003.**
**செய்தி வெளியீடு**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு –III (தொகுதி –IIIA)–ல் அடங்கிய கூட்டுறவு சங்கங்களில் இளநிலை ஆய்வாளர், கூட்டுறவுத்துறை மற்றும் பண்டக காப்பாளர், நிலை –II, தொழில் மற்றும் வர்த்தகத்துறை பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், 15.09.2022 நாளிட்ட அறிவிக்கை எண் 26/2022–ன் வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இப்பதவிக்கான எழுத்துத்தேர்வு கடந்த 28.01.2023 மு.ப. அன்று நடைபெற்று, எழுத்துத்தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 31.08.2023 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட பதவிக்கான முதல் கட்ட சான்றிதழ் சரிப்பார்ப்பு (ம) கலந்தாய்வு கடந்த 08.01.2024 அன்று நடத்தப்பட்டது.

இந்நிலையில் இளநிலை ஆய்வாளர், கூட்டுறவுத்துறை பதவிக்கான இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு 03.05.2024 மு.ப. அன்று தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், எண் 3, தேர்வாணையச் சாலை (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்), சென்னை–600 003 ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தற்காலிக தெரிவாளர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக் கடிதத்தினை விண்ணப்பதாரர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E–mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு பங்கேற்க அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் எழுத்துத்தேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப பணி நியமனம் வழங்கப்படும். மேலும் இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி நியமனம் வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் மேற்படி இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வுக்கு பங்கேற்க தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு வழங்கபட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,
செயலாளர்

No: 59/2024 Date: 26.04.2024

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

**No.3, TNPSC Road – Chennai 600 003.**

## Press Release

The Tamil Nadu Public Service Commission in its Notification No.26/2022 dated 15.09.2022 had invited applications for selection of candidates for appointment by direct recruitment to the posts included in Combined Civil Services Examination-III (Group-III.A Services) [1) Junior Inspector of Co-operative Societies in Co-operative Department in Tamil Nadu Co-operative Subordinate Service 2) Store-Keeper, Grade-II in Industries and Commerce Department in Tamil Nadu Ministerial Service]. The Written examination was held on 28.01.2023 F.N. and results published on 31.08.2023. Subsequently, Phase-I Physical Certificate Verification was conducted on 08.01.2024 F.N. & A.N. The Physical Certificate Verification and Counselling **(Phase-II)** for the post of Junior Inspector of Co-operative Societies in Co-operative Department in Tamil Nadu Co-operative Subordinate Service is scheduled to be held on **03.05.2024 F.N.** to verify the genuineness of claim of the candidates made in their online applications regarding age, qualification, community etc., and to fill up the vacancies for the said post of Junior Inspector of Co-operative Societies in Co-operative Department in Tamil Nadu Co-operative Subordinate Service, at the O/o. Tamil Nadu Public Service Commission, No.3, TNPSC Road, (Near Broadway Bus Stand and Fort Railway Station) Chennai – 600 003.

The list of candidates who have been provisionally admitted for the Physical Certificate Verification and Counselling have been shortlisted based on merit, overall rank, rule of reservation of appointments and number of vacancies and the same have been hosted in the Commission's website. The candidates should bring all essential original certificates as per the claim made in their On-line application. Candidates are hereby informed to download the Memorandum of Admission to Certificate Verification and Counselling through the Commission's web-site viz www.tnpsc.gov.in and also directed to attend the Physical Certificate Verification and Counselling on the scheduled date / time without fail. The candidates are also informed through SMS and E-mail only. **Memorandum of Admission to Certificate Verification and Counselling to the candidates will not be sent by post.**

The allotment to the post is strictly subject to availability of vacancies in their respective reservation categories when they reach their turn as per their rank, rule of reservation and subject to their eligibility. Therefore the candidates called for Physical Certificate Verification and Counselling are not assured of being allotted to the said post

Candidates who do not appear for the Physical Certificate Verification and Counselling on the scheduled date and time allotted to them will lose their opportunity in the merit list and they will not be given any further chance to appear for the same.

S.Gopala Sundara Raj, I.A.S.
Secretary